# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 305/மா/2023**
**நாள் : 31.10.2023**

திருமதி. த. அம்மாபொண்ணு,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 8, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கீழ்ப்பாக்கம், தியாகப்பா தெரு, எண்.42/66 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி த. அம்மாபொண்ணு என்பவரின் 20.09.2023 நாளிட்ட மனு 25.09.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 305/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, கீழ்ப்பாக்கம், தியாகப்பா தெரு, எண்.42/66 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி த. அம்மாபொண்ணு என்பவரின் 20.09.2023 நாளிட்ட மனுவில்:-

நான் சென்னை, கீழ்ப்பாக்கம், தியாகப்பா தெருவில், கதவு எண்.42/66, சந்தில் கடைசியில் குடும்பத்துடன் கடந்த 30 ஆண்டுகளாக குடியிருந்து வருகின்றேன். என் வீட்டிற்கு முன்னால், சென்னை எழும்பூர் கிராமம், பிளாக் எண்.10, R.S.No.128/1, சென்னை கீழ்ப்பாக்கம், தியாகப்பா தெருவில் சந்தின் நடுப்பகுதியில் கதவு எண்.44/66 வீட்டில் திரு. A. பாலகிருஷ்ணன் த/பெ. ஆறுமுக நயினார் (லேட்) மற்றும் த/பெ. A. உத்திரமணி (லேட்) ஆகியோர் வசித்து வருகிறார். திரு. A. பாலகிருஷ்ணன் அவர்கள் இப்பொழுது வசிக்கும் வீடு பெருநகர சென்னை மாநகராட்சி அனுமதி பெறாமலும், விதிகளை மீறி பொதுப்பாதையை ஆக்கிரமித்து வீட்டையும், அதில் 2 பால்கனியையும் கட்டியுள்ளார். மேலும் பொதுப்பாதையில் போக்குவரத்திற்கு இடையூறாக பல காரியங்களை செய்தும் வருகின்றார். இவர் வீட்டை கடந்துதான் கடைசியில் உள்ள எங்களது வீட்டிற்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் சட்டப்படி ஒரு வீட்டிலிருந்து ஒரு குழாய் மூலம் மட்டும் தான் கழிவுநீரை அகற்ற வேண்டும் என்பது சட்டம். ஆனால் இவர் வீட்டில் 20 குழாய்கள் மூலம் கழிவுநீரையும், அத்துடன் திடக்கழிவுகளையும் வெளியேற்றி வருகிறார். அதனால் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு பொதுப்பாதையில் கழிவுநீர் வெளியேறி நடைபாதையில் செல்கிறது. அதை மிதித்துதான் என் வீட்டிற்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இவரின் இச்செயலால் அங்கு சுகாதார முறையில்

வாழ வழியில்லை. மனித உரிமை பாதிக்கப்படுகிறது. பொதுப்பாதை நடுவில் 10 சிமெண்ட் போஸ்ட் அமைத்து, கம்பி வேலி அமைக்க ஆரம்ப கட்ட வேலைகளை செய்தார். போலீஸ் தலையிட்ட பின்னர் பிரச்சனைகள் முடிவுக்கு வந்தது. அங்கு வாழும் எங்களுக்கும், பொது மக்களுக்கும் நாளுக்கு நாள் பல வகையில் A. பாலகிருஷ்ணன் தாங்க முடியாத தொல்லைகளை கொடுத்து வருகிறார். எங்களுக்கு ஏற்பட்டுள்ள மேற்கண்ட பிரச்சனையிலிருந்தும், கஷ்டத்திலிருந்தும் விடுபட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கடந்த 2009ம் ஆண்டு முதல் 2023 வரை பல மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது. அந்த கடிதங்களை பெற்றுக்கொண்ட அண்ணாநகர் 8வது மண்டல பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் 07.12.2009ல் திரு. A. பாலகிருஷ்ணன் வீட்டிற்கு டெமாலிஷன் நோட்டீஸ் அனுப்பினார்கள். 30 நாட்கள் கால கெடு முடிந்து 15 வருடம் ஆகியும் இதுவரை முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் 8வது மண்டல அலுவலர்கள் மேற்கண்ட திரு. A. பாலகிருஷ்ணன் வீட்டிற்கு De-Occupation Notice No. Zone VIII/075/2021 dated 29.12.2021ல் வழங்கினார்கள். கடிதத்தில் குறிப்பிட்ட காலகெடு 7 நாட்கள் முடிந்தவுடன் மேற்கண்ட கட்டிடத்தினை இடிப்பதற்கு ஏற்றவகையில் தொடர் நடவடிக்கையாக சென்னை பெருநகர மெட்ரோ வாட்டர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்திற்கு, கழிவுநீர் குடிநீர் இணைப்பை துண்டிப்பதற்கு கடிதம் அனுப்பவில்லை. அதுபோல், மின் இணைப்பை துண்டிப்பதற்கு மின்சார வாரியத்திற்கு இதுவரை கடிதம் அனுப்பவில்லை. பாதுகாப்பிற்காக காவல்துறைக்கும் கடிதம் அனுப்பவில்லை, கடந்த 600 நாட்களாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. திரு. A. பாலகிருஷ்ணனின் சட்ட விரோத, மனித நேயமற்ற செயலால் இங்கு குடியிருக்கும் எங்கள் குடும்பத்தாரும், பொதுமக்களும் கடந்த 30 ஆண்டுகளாக கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகின்றோம். எங்களது அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டு வருகின்றது.

திரு. A. பாலகிருஷ்ணன் வீட்டை இடிப்பதற்கு தடையாக அரசு உத்தரவு மற்றும் நீதிமன்ற தடை உத்தரவோ இல்லாத நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி 8வது அண்ணாநகர் மண்டல அதிகாரிகள் மாதாமாதம் பொதுமக்களின் வரி பணத்திலிருந்து சம்பளம் பெற்றுக்கொண்டு தாங்கள் செய்ய வேண்டிய கடமையை செய்ய தவறிவிட்டனர். திரு. A. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு மறைமுகமாக உதவி செய்து வருகின்றனர். ஏன் விதிமீறி கட்டிடம் கட்டிய திரு. A. பாலகிருஷ்ணனுக்கு உதவி செய்கிறார்கள் என்பது தாங்கள் அறிந்ததே. சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலர்கள் சரியான நடவடிக்கை எடுக்காததால் நாங்கள் பாதிக்கப்பட்டு வருகிறோம்.

ஆகவே, மேற்கண்ட சட்ட விரோதமாக பொதுப்பாதையை ஆக்கிரமித்து கட்டிய திரு. A. பாலகிருஷ்ணன் வீட்டை இடிக்கவும், கடந்த 15 ஆண்டுகளாக உரிய நடவடிக்கை எடுக்காத தன் கடமையை செய்யாத சென்னை பெருநகர 8வது அண்ணாநகர் மண்டல அலுவலர்கள் மீது சட்ட ரீதியாகவும், துறை ரீதியாகவும் தக்க தண்டனை கிடைக்க சரியான உத்தரவு வழங்கி எங்களுக்கு உதவி செய்ய வேண்டுகிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 18.10.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 13.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 18.10.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

சென்னை கீழ்ப்பாக்கம் தியாகப்பா தெருவில் அமைந்துள்ள எனது வீட்டிற்கு முன்பு திரு. எ. பாலகிருஷ்ணன் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியின்

அனுமதியின்றி கட்டடம் கட்டியுள்ளார். மேலும் பொதுப்பாதையை ஆக்கிரமித்து மேற்கண்ட கட்டடத்தையும், அதன் பால்கனியையும் கட்டியுள்ளார். அங்குள்ள பொதுப்பாதையை ஆக்கிரமித்து கட்டியுள்ள இவரது வீட்டை கடந்துதான் எங்களது வீட்டிற்கு செல்லமுடியும். பொதுப்பாதையை ஆக்கிரமித்து திரு. பாலகிருஷ்ணன் தனது வீட்டை கட்டியுள்ளதால், எங்களது வீட்டிற்கான வழி அடைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தில் கழிவு நீர் குழாயை அமைத்துள்ளதால், அதில் ஏற்படும் அடைப்பின் காரணமாக கழிவுநீர் நடைபாதையிலேயே செல்கிறது. இவ்வாக்கிரமிப்பு குறித்து மாநகராட்சியில் பல்வேறு புகார் மனுக்கள் அனுப்பப்பட்டும் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட பொதுப்பாதை ஆக்கிரமிப்பால் எங்கள் குடும்பத்தினரும், அங்கு வசிக்கும் பொதுமக்களும் மிகவும் சிரமப்படுகின்றனர்.

எனவே சட்ட விரோதமாக பொதுப்பாதையை ஆக்கிரமித்து திரு. பாலகிருஷ்ணன் என்பவரால் கட்டப்பட்டுள்ள வீட்டின் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 20.9.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8ன் உதவிப் பொறியாளர் 18.10.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை கீழ்ப்பாக்கம் தியாகப்பா தெருவில் அமைந்துள்ள திரு. எ. பாலகிருஷ்ணன் என்பவரால் கட்டப்பட்டுள்ள வீடு அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மண்டல அலுவலகத்தால் Stop work Notice / Notice calling for approved plan Notice 17.9.2009 அன்றும், De-occupation Notice 29.12.2021 அன்றும் வழங்கப்பட்டுள்ளது என்றும், இதன் தொடர் நடவடிக்கையாக மாநகராட்சி ஆணையரிடமிருந்து Lock and Seal உத்தரவு பெறப்பட்டு, மேற்கண்ட கட்டடத்தை இன்னும் ஒரு மாத காலத்தில் Lock and Seal செய்யப்பட்டு அதன் அறிக்கையை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 8ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது:**

மனுதாரர் தனது வீட்டிற்கு முன்னால் சென்னை எழும்பூர் கிராமம் பிளாக் எண் 10 R.S No.128/1 சென்னை கீழ்ப்பாக்கம், தியாகப்பா தெருவில் சந்தின் நடுப்பகுதியில் கதவு எண் 44/66 வீட்டில், திரு. எ. பாலகிருஷ்ணன் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதியில்லாமலும், பொதுப்பாதையை ஆக்கிரமித்தும் தன்னுடைய வீட்டையும், பால்கனியும் கட்டியுள்ளார் எனவும், இது குறித்து 10 ஆண்டுகளுக்கு மேலாக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் புகார் மனு அளித்தும் இது வரை அமலாக்க நடவடிக்கை எடுக்கவில்லை

என்றும் தெரிவித்து தன் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள திரு எ. பாலகிருஷ்ணன் என்பவரால் கட்டப்பட்டுள்ள வீடு அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மண்டல அலுவலகத்தால் Stop work notice / Notice calling for approved plan 17.9.2009 அன்றும், De-occupation Notice 29.12.2021 அன்றும் வழங்கப்பட்டுள்ளது என்பதும், இதன் தொடர்ச்சியாக மாநகராட்சி ஆணையிடமிருந்து Lock and Seal உத்திரவு பெறப்பட்டு மேற்கண்ட கட்டடத்தை இன்னும் ஒரு மாதத்திற்குள் Lock and Seal செய்யப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் உதவிப்பொறியாளர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மேற்குறிப்பிட்ட வீடு மாநகராட்சியின் அனுமதியில்லாமல் கட்டப்படுவதாக தெரிவித்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8 அலுவலகத்தால் 17.9.2009 அன்று Stop work notice/notice calling for approved plan மற்றும் 29.12.2021 அன்று De-occupation notice வழங்கிவிட்டு அதன் தொடர்ச்சியாக Town and Country Planning Act 1971ன்படி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்தது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் அலுவலர்கள் மீது சந்தேகம் எழுவதாக இம்முறைமன்றம் கருதுகிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும். மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், இவ்வாறான அனுமதியில்லாமல் கட்டப்படும் கட்டடங்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருப்பது குறித்து தன்னுடைய கடுமையான அதிருப்தி மற்றும் அத்தகைய அதிகாரிகளை ஏன் பணியிடை நீக்கம் செய்யக்கூடாது என்று கேள்வி எழுப்பியுள்ள நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் மேற்கண்ட செயல் உள்நோக்கம் கொண்டதாக தெரிகிறது என்று இம்முறை மன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேற்கண்ட விதிமீறல் கட்டடத்தின் உரிமையாளருக்கு 29.12.2021 அன்று De-occupation notice அளித்துவிட்டு, அதன் தொடர்ச்சியாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலர்கள் செயல் தண்டனைக்குரியது என்று இம்முறை மன்றம் கருதுகிறது.

2014ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 7 மற்றும் 12ல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

**7. The Ombudsman shall perform all or any of the following functions, namely:-**

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely:-

(a) x x x x

(b) x x x x

(c) where the irregularity is due to negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

மற்றும்

**12 (1) The Ombudsman may consider and dispose of complaint other than those involving criminal offices, in the following manner, namely**

(a) xxxx

(b) xxxx

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) and (e) xxxx

இம்முறைமன்றத்திற்கு மேற்கண்ட பிரிவுகளில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

மனுதாரர் 10 ஆண்டுகளுக்கு மேலாக சென்னை எழும்பூர் கிராமம் பிளாக் எண் 10, R.S No.128/1 சென்னை கீழ்ப்பாக்கம் தியாகப்பா தெருவில் சந்தின் நடுப்பகுதியில் கதவு எண் 44/66ல் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுவரும் கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு அளித்தும், 17.9.2009 அன்று Stop work notice/notice calling for approved plan மற்றும் 29.12.2021 அன்று De-occupation notice வழங்கிவிட்டு அதன் தொடர்ச்சியாக எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கை எடுக்காமல் இருந்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மேற்கண்ட கட்டடத்தின் மீது சட்டப்பூர்வ நடவடிக்கையை ஒரு மாதத்திற்குள் எடுக்கும்படியும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் மண்டல அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறை மன்றம் ஆணையிடுகிறது.

This is a clear case of total inaction, collusion, complicity, connivance, and arrogant apathy on the part of the Zonal Officials concerned. This kind of abetment of violators by not taking prompt and continuous action against the building violations for years together expose the Zonal mindset and attitude besides betraying a deep lack of any review or follow-up by the Assistant Commissioner level or the Regional Deputy Commissioner level functionaries of the Greater Chennai Corporation concerned.

Unless the Greater Chennai Corporation Commissioner initiates severe punitive action by periodical reviews this type of violations in the Corporation limits cannot be curbed or even regulated. The credibility image of the zone has fallen into abnormal depths of inertia and inaction.

The Forum express its acute shock over the indifference, abetment and wilful collusion of the field delinquents. A copy of this order is being sent to Hon'ble Chief Minister's Office and Government in MAWS department for information.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. T. அம்மாபொண்ணு,
42/66, தியாகப்பா தெரு,
கீழ்பாக்கம், சென்னை – 600 010.

2) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலகம்,
செயிண்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600 009.

4) முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

5) மண்டல அலுவலர்,
மண்டலம் - 8, பெருநகர சென்னை மாநகராட்சி,
368, புல்லா அவென்யு,
செனாய் நகர், சென்னை – 600 030.

6) துணை கண்காணிப்பாளர் (பணிகள்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

7) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்